# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1912/2 - 2015 අප්‍රේල් මස 27 වැනි සඳුදා - 2015.04.27

*1912/2 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ 5/2011*

***2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டம்***

*2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 13 ஆம் 14 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 89 (2) (இ) என்னும் பிரிவின் கீழ் பெருந்தெருக்கள் மற்றும் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

கபீர் ஹாசிம்,
பெருந்தெருக்கள் மற்றும்
முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சர்.

கொழும்பு,
2015, ஏப்பிறல் 27.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2015 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் (கொழும்பு – கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்வொழுங்குவிதிகள் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க தேசிய பொதுவழிகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை மூலம் "கொழும்பு – கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு" என வெளிப்படுத்தப்பட்டு 2013 ஒக்ரோபர் 12 ஆந் திகதிய 1831/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "கொழும்பு – கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு" இற்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

3. (1) மேற்கூறப்பட்ட பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவில் பயன்படுத்தப்படுகின்ற ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியிடமிருந்து இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வீதப்படி அத்தகைய சாரதியாலான அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் பாவனை தொடர்பில் பாவனையாளர் கட்டணமொன்று அறவிடப்படுதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டணமானது பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் முழுத்தூரம் அல்லது அதன் பாகம் தொடர்பில் விதிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்.

(3) வெவ்வேறு வகுதிகளைச் சேர்ந்த வாகனங்களுக்கு வெவ்வேறு பாவனையாளர் கட்டணங்கள் ஏற்புடையனவாக்கப்படலாம்.

(4) பந்தி (1) இல் குறிப்பீடு செய்யப்பட்ட பாவனையாளர் கட்டணம் பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்:-

(அ) நேரடியாக காசாகச் செலுத்துவதன் மூலம் அல்லது ;

(ஆ) வாகனத்துடன் இணைக்கப்பட்டதும் (இதனகத்துப்பின்னர் "E-tag " எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) உபாயமொன்றினூடாக இலத்திரனியல் ரீதியில்.

4. (1) (இதனகத்துப்பின்னர் " E-tag " எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ரீதியில் கொடுப்பனவுகளைச் செய்வதற்கு விரும்புகின்ற ஒரு வாகனத்தின் சொந்தக்காரர் அல்லது சாரதி ஒருவர், (இதனகத்துப்பின்னர் "அதிகாரசபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க, வீதி அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ்த் தாபிக்கப்பட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையுடன் பதிவுசெய்தல் வேண்டுமென்பதுடன், அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்தில் (இதனகத்துப்பின்னர் "ETCS" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ஆயவரிச் சேகரிப்பு முறைமை பாவனையாளர் கட்டணக் கணக்கொன்றைத் திறப்பதற்குத் தேவைப்படுத்தப்படுதலும் வேண்டும்.

(2) E-tag பாவனையாளரொருவராகப் பதிவுசெய்யப்படுவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் அதிகாரசபையின் வாடிக்கையாளர் சேவை நிலையத்துக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) பதிவுக்கான விண்ணப்பமொன்றைப் பெற்றதன் மேல் அதிகாரசபையானது, ETCS கணக்குத் தொடர்பான தகவலுட்பட விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட தகவல் பற்றி திருப்திப்படுவதன் மீது, அத்தகைய ஆளை E-tag பாவனையாளராகப் பதிவு செய்யலாமென்பதுடன், இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக அவருக்கு E-tag ஒன்றையும் வழங்கலாம்.

(4) ஒவ்வொரு E-tag பாவனையாளரும் (இதனகத்துப்பின்னர் "ETCS வாடிக்கையாளர் உடன்படிக்கை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் ஆயவரி சேகரிப்பு முறைமை பாவனையாளர் கட்டண வாடிக்கையாளர் உடன்படிக்கையொன்றை, அத்தகைய உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைவாக, செய்துகொள்ளுதல் வேண்டும்.

(5) வழங்கப்பட்ட E-tag ஒவ்வொன்றும் வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடியுடன் பொருத்தப்படுதல் வேண்டும்.

(6) ஒவ்வொருE-tag பாவனையாளரும் (இதனகத்துப்பின்னர் "ETC ஒழுங்கை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலத்திரனியல் பாவனையாளர் கட்டணச் சேகரிப்பு ஒழுங்கையைப் பயன்படுத்தும்போது எல்லா நேரங்களிலும் அத்தகைய பாவனையாளர் கட்டணக் கொடுப்பனவைச் செய்வதனை இயலச்செய்வதற்கென ETCS கணக்கில் போதிய வரவு மீதியைப் பேணுதல் அவரது கடமையாதல் வேண்டும்.

(7) போதியளவு வரவு இல்லாதிருக்கும் விடயத்தில்,E-tag பாவனையாளர் ETCS கணக்கின் வரவு மீதியை அதிகரிக்கலாமென்பதுடன், அத்தகைய அதிகரிப்பின் செய்முறைப்படுத்தல் நேரம், E-tag பாவனையாளர் ETC ஒழுங்கையைப் பயன்படுத்துவதற்கு இயன்றவராகவிருக்கக்கூடிய நேரத்துக்கு முன்னர் ஒரு மணித்தியாலத்துக்குக் குறைவாகவிருத்தலாகாது.

(8) E-tag பாவனையாளர் ஒவ்வொருவரும்,E-tagஆனது முறையான தொழிற்படு நிலையில் உள்ளதென்பதை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய E-tagஇற்கான ஏதேனும் சேதம் அல்லது இழப்பு பற்றி அதிகாரசபைக்கு அறிவித்தலும் வேண்டும்.

5. (1) பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போதிய நிதி வரவைக் கொண்ட E-tag பாவனையாளர் ஒருவர் பெயர்குறிப்பிடப்பட்டவோர் இடம் அல்லது இடைமாற்றப்பாதை ஒன்றிலிருந்து பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவினுட் பிரவேசிக்குமிடத்து, அத்தகைய E-tag பாவனையாளர் அத்தகைய இடைமாற்றப்பாதையின் ETC ஒழுங்கை வழியாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்.

(2) E-tag பொருத்தப்பட்ட வாகனமொன்று ETC ஒழுங்கையொன்றின் மீது பயன்படுத்தப்படுமிடத்து, பாவனையாளர் கட்டணம் தன்னியக்கமாகவே ETCS கணக்குக்கெதிராகப் பற்றுவைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன்,E-tag பாவனையாளர் அதிகாரசபையின் வாடிக்கையாளர் கவனிப்பு நிலையத்திலிருந்து அத்தகைய கணக்கின் பாவனை தொடர்பான கூற்றொன்றையும் பெற்றுக் கொள்ளலாம்.

(3) E-tag பாவனையாளரொருவர் பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்துவதற்குப் போதிய நிதி வரவைக் கொண்டிராதவிடத்து, அத்தகைய E-tag பாவனையாளர், (இதனகத்துப்பின்னர் "MUC ஒழுங்கை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) காசாகச் செலுத்தும் பாவனையாளர் கட்டணச் சேகரிப்பு ஒழுங்கைக்கு ETC ஒழுங்கையிலிருந்து தமது வாகனத்தைத் திசைதிருப்புதல் வேண்டும். அத்தகைய கட்டணங்களின் கொடுப்பனவு தொடர்பாக 6ஆம் ஒழுங்குவிதியின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டும்.

6. (1) E-tag பொருத்தப்படாத வாகனமொன்றின் சாரதியானவர் MUC ஒழுங்கைவழியாகச் செல்வதற்கு அனுமதிக்கப்படுவதற்குமுன்னர் ஒரு பெயர்குறிப்பிடப்பட்ட இடம் அல்லாத ஓர் இடைமாற்றுப்பாதையிலிருந்து பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவிட் பிரவேசிக்குமிடத்து, அத்தகைய இடைமாற்றுப்பாதையின் நுழைவாயில் கதவுகளில் இருக்கின்ற கொடுப்பனவு நிலையத்தில் பணிபுரிகின்ற கடமையிலிருக்கும் பணப்பொறுப்பாளரிடமிருந்து நுழைவுச் சீட்டொன்றைப் பெறுதல் வேண்டும்.

(2) இவ்வொழுங்குவிதியின் (1)ஆம் பந்தியிற் குறிப்பீடு செய்யப்பட்ட வாகனமொன்றின் சாரதி அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவிலிருந்து வெளியேறும் நோக்கத்திற்காக இடைமாற்றுப் பாதையொன்றின் கொடுப்பனவு நிலையமொன்றை அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட இடத்தை வந்து சேரும்போது–

(i) அவர் எந்த இடைமாற்றுப் பாதையின் ஊடாகப்பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவினுட் பிரவேசித்தாரோ அந்த இடைமாற்றுப் பாதையில் பெற்றுக் கொண்ட நுழைவுச் சீட்டை MUC ஒழுங்கையிலிருக்கும் பணப்பொறுப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்; அல்லது ;

(ii) அவர் எந்தப் பெயர்குறிப்பிடப்பட்ட இடத்தினூடாகப் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவில் உட்புகுந்தாரோ அந்தப் பெயர்குறிப்பிடப்பட்ட இடத்திலிருக்கும் பணப் பொறுப்பாளருக்கு அறிவித்தல் வேண்டும்.

(3) MUC ஒழுங்கையைப் பயன்படுத்துகின்ற வாகனங்களுக்காக,பணப் பொறுப்பாளர், செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகையை சாரதிக்கு அறிவித்தல் வேண்டும். அதற்கிணங்க சாரதி அத்தகைய இடமாற்றுப்பாதையின் ஊடாக அல்லது பெயர்குறிப்பிடப்பட்ட இடத்தின் ஊடாகக் கடந்து செல்ல அனுமதிக்கப்படுவதற்கு முன்னர் அத்தகைய தொகையைச் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய கொடுப்பனவு தொடர்பிலான பற்றுச்சீட்டொன்றைப் பணப் பொறுப்பாளர் வழங்குதலும் வேண்டும்.

7. (1) 6 (1) ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்ட நுழைவுச் சீட்டைப் பெற்றுக்கொண்டசாரதி ஒருவர்,அவர் எந்த இடைமாற்றுப் பாதையின் அல்லது பெயர்குறிப்பிடப்பட்ட இடத்தின் ஊடாக அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவிலிருந்து வெளியேற முன்னுகின்றாரோ அந்த இடைமாற்றுப் பாதையை அல்லது பெயர்குறிப்பிடப்பட்ட இடத்தை அடையும் வரைக்கும் அத்தகைய நுழைவுச்சீட்டைத் தமது உடைமையில் பாதுகாப்பாக வைத்திருக்குமாறு தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) சாரதி–

(அ) நுழைவுச் சீட்டை ஒப்படைக்க முடியாதிருக்கும்பட்சத்தில்; அல்லது

(ஆ) பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவில் எந்த இடத்தினூடாக உட்புகுந்தாரோ அந்தஇடத்தை அடையாளம் காட்டத் தவறுகின்ற பட்சத்தில்,

சாரதியானவர் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் முழுத் தூரத்தையும் பயணித்துள்ளார் எனக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்,அதற்கிணங்க பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவின் முழுத் தூரத்திற்குமான கட்டணமானது அவரிடமிருந்து அறவிடப்படுதலும் வேண்டும்.

8. (1) அதிகாரசபையானது,இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் நோக்கத்திற்காக பாவனையாளர் கட்டண தேசியப்பெருந்தெருவழியாக தேவைப்படுத்தப்பட்ட இடங்களில் போதிய எண்ணிக்கையினவான நுழைவாயில் கதவுகள் அமைக்கப்படுவதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு வழியாக அவ்வாறு அமைக்கப்பட்ட நுழைவாயில் கதவுகள் அதிகாரசபையால் சொந்தமாக வைத்திருக்கப்படுதலும் தொழிற்படுத்தப்படுதலும் மற்றும் பேணப்படுதலும் வேண்டுமென்பதுடன், ஒவ்வொரு நுழைவாயில் கதவிலும் பணப் பொறுப்பாளர் ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டிருத்தலும் வேண்டும்.

(3) MUC ஒழுங்கைகளிலுள்ள பணப் பொறுப்பாளர் (2) ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்ட நுழைவாயில் கதவு ஒவ்வொன்றிலும், அத்தகைய பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவைப் பயன்படுத்துகின்ற சாரதி ஒவ்வொருவரிடமிருந்தும் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் அ என்பதில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய தொகையிலான பாவனையாளர் கட்டணத்தைச் சேகரிப்பதற்குப் பொறுப்புடையவராதல் வேண்டும்:

ஆயினும், இந்த ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் இந்த ஒழுங்குவிதிகளுக்கான அட்டவணையின் பாகம் ஆ என்பதில் குறித்துரைக்கப்பட்ட, அத்தகைய கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்ட வகுதியொன்றினைச் சேர்ந்த வாகனமொன்றைச் செலுத்துகின்ற சாரதி ஒருவருக்கு ஏற்புடையனவாதலாகாது.

9. பணப் பொறுப்பாளர் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய நேரங்களில் அன்றைய தினத்தின் கட்டணங்களின் சேகரிப்பை அதிகாரசபையால் அதன் சார்பாக அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் கையளித்தலும், அத்தகைய தொகை தொடர்பில் பற்றுச்சீட்டு ஒன்றைப் பெறுதலும் வேண்டும்.

10. பாவனையாளர் கட்டணங்களாக அவ்வாறு சேகரிக்கப்பட்ட பணம் அதிகாரசபையின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இந்த ஒழுங்குவிதிகள் ஏற்புடைத்தாகும் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவை அபிவிருத்தி செய்வதற்கும் மற்றும் பேணுவதற்குமான நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுதலும் வேண்டும்.

11. இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற வாகனமொன்றின் சாரதி தவறொன்றைப் புரிந்தவராதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் சுருக்கமுறை விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது -

(அ) முதலாவது தவறொன்றின் விடயத்தில் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்; அத்துடன்

(ஆ) இரண்டாவது அல்லது அடுத்துப் பின்னரான தவறொன்றின் விடயத்தில் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கும்,

ஆளாதலும் வேண்டும்.

12. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக —

"பெயர்குறிப்பிடப்பட்ட இடம்" என்பது, வாகனமொன்றின் சாரதியொருவர் நுழைவுச் சீட்டொன்றைப் பெற்றுக் கொள்ளாமல் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெருவினுட் பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப்பட்ட ஒரு அணுக்க இடம் என்று பொருளாகுமென்பதுடன், புதிய களனி இடைமாற்றுப் பாதை, பேலியாகொடை இடைமாற்றுப் பாதை, கட்டுநாயக்கா இடைமாற்றுப் பாதை மற்றும் கட்டுநாயக்கா (25.80 கி.மீ) என்பவற்றையும் உள்ளடக்கும்;

"E-tag" என்பது, இலத்திரனியல் பாவனையாளர் கட்டண ஒழுங்கையின் இடத்தின் ஊடாகக் கடந்துசெல்லும்போது இலத்திரனியல் ரீதியில் பாவனையாளர் கட்டணத்தைச் செலுத்தும் நோக்கத்துக்காக வாகனத்தின் முன்பக்கக் கண்ணாடியின் மீது நிரந்தரமாக நிறுவப்பட்ட ஓர் இலத்திரனியல் உபாயம் என்று பொருளாகும்;

"பணப் பொறுப்பாளர்" என்பது இடைமாற்றுப் பாதையொன்றின் நுழைவாயில் கதவுகளில் அல்லது பெயர்குறிப்பிடப்பட்ட இடமொன்றில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள அலுவலர் ஒருவர் என்று பொருளாகும்;

"பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு" என்பது கொழும்பு — கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு என்று பொருளாகும்.

13. 2013, ஒக்ரோபர் 17 ஆந் தேதிய 1832/28 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, தேசியப் பொதுவழிகள் (கொழும்பு — கட்டுநாயக்கா பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு) ஒழுங்குவிதிகள் அவற்றின் கீழ்ச் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இத்தால் இல்லாதொழிக்கப்படுகின்றன.

**அட்டவணை**




**பாகம் அ**

**கொழும்பு - கட்டுநாயக்கா தேசியப் பெருந்தெரு(CKE)**

வகுதி I ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர்
கட்டண வீதங்கள் (ரூபா)

| | இடைமாற்றப்பாதைகளுக் கிடையிலான தூரங்கள் 14.58கிமீ | 7.56கிமீ | |
|---|---|---|---|
| | பேலியகொடை | ஜா-எல | கட்டுநாயக்கா |
| பேலியகொடை | | | |
| ஜா-எல | 200 | | |
| கட்டுநாயக்கா | 300 | 200 | |


I ஆவது வகுதியைச் சேர்ந்த வாகனங்களுக்கு
கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட
வேண்டும்

| | |
|---|---|
| **கார்கள்** | |
|  | எல்லா வகையான கார்கள் |
|  | எல்லா வகையான ஜீப்புக்கள் |
|  | எல்லா வகையான சலூன் ஸ்ரேசன் வாகன்கள் |
| **இரட்டை நோக்க வாகனங்கள்** | |
|  | எல்லா கப்புகள் (ஒற்றை மற்றும் இரட்டை) |
|  | 9 ஆசனங்கள் வரையான எல்லாப் பயணிகள் வான்கள் |
|  | வாகனத்தின் மொத்தஎடை 3500 கி.கி வரையிலான எல்லா சாமான் வான்களும் றக்குகளும் |
| **பாரமற்ற மோட்டார் லாரி** | |
|  | 2 அச்சுக்களையும் மற்றும் 4 சக்கரங்களையும் கொண்ட லாரிகள் மற்றும் றக்குகள் |

**வகுதி 2 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)**

| | *இடைமாற்றுப்பாதைகளுக் கிடையிலான தூரங்கள* *14.58 கிமீ* *7.56 கிமீ* | | |
|---|---|---|---|
| | பேலியகொடை | ஜா-எல | கட்டுநாயக்கா |
| பேலியகொடை | | | |
| *ஜா-எல* | *350* | | |
| கட்டுநாயக்கா | *450* | *300* | |




2 ஆவது வகுதியைச் சேர்ந்த வாகனங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட வேண்டும்

| பாரமற்ற மோட்டார் கோச்சுக்கள் | |
|---|---|
|  | 9 ஆசனங்களுக்கு அதிகமான ஆசனங்களுடைய பயணிகள் வான் |
|  | 9 ற்குக் கூடுதலானவையும் 33 இற்குக் குறைவானவையுமான பயணிகள், ஆசனங்களைக் கொண்ட எல்லா வசுக்கள் |

**வகுதி 3 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)**

| | *இடைமாற்றுப்பாதைகளுக் கிடையிலான தூரங்கள்* *14.58 கிமீ* *7.56 கிமீ* | | |
|---|---|---|---|
| | பேலியகொடை | ஜா-எல | கட்டுநாயக்கா |
| பேலியகொடை | | | |
| *ஜா- எல* | *400* | | |
| கட்டுநாயக்கா | *600* | *300* | |


3 ஆவது வகுதியைச் சேர்ந்த வாகனங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட வேண்டும்

| **மோட்டார் கோச்சு** | |
|---|---|
|  | 33 இற்கு மேற்பட்ட ஆசனங்களுடைய எல்லா வசுக்கள் |
| | **பாரமற்ற மோட்டார் லாரி** |
|  | 2 அச்சுக்கள் மற்றும் 6 சக்கரங்கள் கொண்ட லாரிகள் மற்றும் ரக்குகள் |
| | **மோட்டார் லாரி** |
|  | மொத்த வாகன எடை 17000 கி.கி. இற்கு மேற்பட்ட எடையான லாரிகள் மற்றும் ரக்குகள் (3 அச்சு ரக்குகள் வரை) |

**வகுதி 4 ஐச் சேர்ந்த வாகனங்களுக்கான பாவனையாளர் கட்டண வீதங்கள் (ரூபா)**

| | *இடைமாற்றப்பாதைகளுக் கிடையிலான தூரங்கள் 14.58 கிமீ 7.56 கிமீ* | | |
|---|---|---|---|
| | பேலியகொடை | ஜா-எல | கட்டுநாயக்கா |
| பேலியகொடை | | | |
| ஜா-எல | 600 | | |
| கட்டுநாயக்கா | 800 | 300 | |

4 ஆவது வகுதியைச் சேர்ந்த வாகனங்களுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவை உள்ளடக்கப்பட வேண்டும்

| **பாரமான மோட்டார் கோச்சு** | |
|---|---|
|  | கூட்டாக இணைக்கப்பட்ட வசுக்கள் |
| **பாரமான மோட்டார் லாரி** | |
|  | 4 அல்லது அதற்கு மேற்பட்ட அச்சுக்களைக் கொண்ட எல்லா வாகனங்கள் |

**பாகம் ஆ**

**கொழும்பு - கட்டுநாயக்கா தேசியப் பெருந்தெருவின் மீது பாவனையாளர் கட்டணத்தின் கொடுப்பனவிலிருந்து விலக்களிக்கப்பட்ட வாகனங்கள்**

1. தரப்பட்ட ஏதேனும் நேரத்தில் சனாதிபதியின் பாதுகாப்பு வாகனத் தொடரின் ஒரு பாகமாக அமையும் எல்லா வாகனங்களும் அத்தகைய வாகனங்கள் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு வழியாக செலுத்திச் செல்லப்படும் வரை.

2. தரப்பட்ட ஏதேனும் நேரத்தில் பிரதம அமைச்சரின் பாதுகாப்பு வாகனத் தொடரின் ஒரு பாகமாக அமையும் எல்லா வாகனங்களும் அத்தகைய வாகனங்கள் பாவனையாளர் கட்டண தேசியப் பெருந்தெரு வழியாக செலுத்திச் செல்லப்படும் வரை.

*5- 256*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.